

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் சூழ்ந்த என் வாழ்வில் வசந்தத்தை எதிர் நோக்கி என் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்த போது என் சிந்தையில் உதித்த உண்மை கருத்துக் களை கவிமலர்களாய் இச்சோலையில் மணம் பரப்ப விட்டுள்ளேன் சாலைகளிலும் சந்தி வெளிகளிலும் நான் நின்று சங்கடப்பட்ட போது என்னை சந்தித்த சில முகங்கள் என் விரலைப் பிடித்து சமூக ஒரு விழிப்பை எனக்கு ஊட்டி எழுதுவதற்கு எழுது கோலை எடுத்துதந்தனர் இவர்கள் கொடுத்த எழுது கோலாலே நான் இன்று எழுதிக் கொண்டிருக்கி றேன் தொடர்ந்தும் எழுதவேண்டும் என்பதற்க்காக இரவுகளைக் கூட நான் பகலாக்கிவருகிறேன், என் ஊக்கத்திற்கு கலை உலகமே நீ உதவிடுவாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்
தெருத்தூசியோனின்

# குமுறும் குரல்கள்

கவிதைத் தொகுதி

பதிப்புரிமை
ஆசிரியருக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இன்றைய விழாநாயகன் ''தெருத்தூசியோன்'' (சாள்ஸ் ராஜ் குமார்) அவர்களது கவிதையை விமர்சிக்கும் அளவுக்கு நான் ஒரு கவிஞர் அல்ல. கற்றுத் தேர்ந்த மேதையும் அல்ல! மனிதன் என்ற அளவில் அன்னாருடைய கவிதையைப்பற்றி அல்ல! கலைத்தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இக்கலைஞனைப்பற்றியே உயித்துணர்ந்து சிந்திக்கின்றேன்.

''உன் தாயின் கருவறையில் உருவாகுமுன்னரே உன்னை நானறிவேன்'' எனக்கூறும் இறைவன், விழிகள் இழந்த நிலையில் இவரை உலகுக்கு தரவில்லை. மாறாக நல்விழிகளோடுதான் இறைவன் படைத்தான். துரதிஷ்டவசமாக, பூவிழுந்த கண்களுக்கு சத்திர சிகிச்சை நடந்த பொழுது, உமிழும் ஒளி நரம்பு வெட்டப்பட்டு இரு விழிகளையும் சின்னஞ்சிறு பிராயத்திலேயே இழந்துவிட்ட ஒரு கலைஞனாவார்.

''நான் காணும் உலகம்'' என்ற இவரது நூலை வாசித்தே இவரோடு அறிமுகமானேன். இவரை ஒரு நாள் பேட்டிகண்டு ''வீரகேசரி'' இதழில் 13.9.92 ஆம் திகதி ''விழிபோனாலும் வாழ்வின் வழி செல்கிறார்'' என்ற தலைப்பில் ஒரு விமர்சனக் கட்டுரை எழுதினேன்.

கல்விமான்களும், புத்திஜீவிகளும் பிறந்த யாழ் மண்ணிலே மலர்ந்த வாடாமலரே நமது தெருத்தூசியோன் ஆவார். இவருக்கு பொருளாதார தடை மலைபோல் எதிரே குவிந்த போதிலும் எதிர் நீச்சல் போட்டு ஐந்து நூல்களை வெளியிட்டுள்ள இவர் தனது விடா முயற்சியின் பயனாக ''குமுறும் குரல்கள்'' என்ற கவிதை நூலையும் உங்கள் அன்பான கரங்களிலே தவழவிட்டுள்ளார்.

இன்றைய அவலங்களையும், ஓலங்களையும் அகக்கண்களால் கண்டுணர்ந்து இந்த அருமையான நூலை வெளியிட்டு, அதன் மூலம் ''ஒற்றுமை ஓங்கட்டும்'' ''மறந்திருப்போம்'' ''ஒற்றுமைக்கு ஒரு குரல்'' ஆகிய கவிதைகள் வாயிலாக அனைத்து மக்களையும் சாந்தி. சமாதானத்துடன் வாழ தேசிய நீரோட்டத்திற்கே அழைத்துச் செல்கிறார்.

அன்னாருடைய இந்த அற்புதமான — அகக்கண்களால் சிந்தனை சிறகடித்துப் பறக்கத்தக்க இவரது படைப்புகளை வாங்கிப் படித்து, இவருக்கு உங்கள் அன்பான உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதன் மூலமே எதிர்காலத்தில் இன்னும் பல படைப்புகளை உருவாக்க முடியும்.

உங்கள் நேசகரங்களை நீட்டுமாறு வாஞ்சையுடன் வேண்டுகிறேன்.

இவ்வண்ணம்,

ஏ. தாசன் பெர்னாண்டஸ்

இயக்குனர்

சென் ஜோன்ஸ் கல்வி வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bibliographic Data

| | | |
|---|---|---|
| **Title** | :- | KUMURUM KURALGAL |
| **Author** | :- | Blind Author<br>Theruthusiyon |
| **Publisher** | :- | St. JOHN'S STUDY CIRCLE<br>227/4, Maha Vidyalaya<br>Mawatta,<br>Colombo-13. |
| **Printing** | :- | LINRAJ'S PRINTERS<br>282/15, Dam Street,<br>Colombo-12, |
| **Price** | :- | Rs. 25/- |
| **Subject** | :- | Poems |
| **Cover Design** | :- | Off-set |
| **Pages** | :- | 50 |
| **First Edition** | :- | Oct. 1992 |
| **Copy Right** | :- | Reserved |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இன் நூலை யாருக்கு சமர்ப்பணம் செய்வதென்று சங்கடப்பட்ட சமயத்தில் என் கிராமத்தில் ஒரு கோபுரம் சாய்ந்து விட்டதாக என் செவிகளுக்கு ஒரு செய்தி எட்டியது. என்னை அது வாட்டியது.

நயினாமடு என்ற கிராமத்தை உண்டாக்கி, அவ்வூரிலே குடியிருப்புகளை அமைத்து ஏழை எளியவருக்கு ஏற்றம் கொடுத்து எம் வாழ்க்கையை வளம் படுத்தி வைத்த, வள்ளல் தெச இராஜசிங்கம் அவர்களின் கல்லறைக்கு இந் நூலை சமர்ப்பிக்கிறேன். தேசத்தில் தேய்ந்துபோன தேகங்களுக்கும் சுடுகாடுகளில் சாம்பலாய்ப் போன சரித்திர சரீரங்களுக்கும் இந் நூல் சமர்ப்பணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானொலி பத்திரிகை எழுத்தாளரும்,
நாடக ஆசிரியரும் நடிகருமான,
ஹட்டன் எஸ். எம். ரவி

# நானும் தெருத்துாசியோனும்

வாசக நெஞ்சங்களுக்கு
வந்தனம் கூறி
வரைகின்றேன் என் எண்ணங்களை..........

விழிகளை இழந்து
விதியை நினைந்து
வீதியிலே நடந்து
விபரிக்கும் கவிதைகள்
வித்தியாசமானவைகள்
விசித்திரமானவைகள்.....

வாழ்க்கையில் கவிஞனுக்கு போராட்டம்
வந்தாலும், வறுமையில்,
வாடித் தவித்தாலும்,
வாழ்க்கையின் சோகங்களை உணர்ந்து
வர்ணிப்பவன் கவிஞன்.........

தன்னை அழித்து சமூகத்தை உயர்த்தி
தரணியில் நல்ல பாதையில் அழைத்துச் செல்பவன்
கற்பனை ஞானி அந்த வகையில் கவிஞர் தெருத்துாசியோன்
இலங்கைத் திரு நாட்டின் இணையற்ற கவிஞனாய் வர வேண்டும்
என்ற ஆசையுடையவர், இதுவரை முத்தான தத்துவங்களை
ஐந்து புத்தகமாய் எழுதி வாசக நெஞ்சங்களை.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்த இவர் இப்போது புதிய காவியமாய் குமுறும் குரல்கள் என்ற இந்த முதலாவது கவிதைத் தொகுதியைத் தருகிறார்.

கவிதைகள் சுகமானவை
காலத்தின் கோலத்தை - தன்
கற்பனை
கண்களில்
காணும் விதம்
கவிதையாகி - எம்
கரங்களுக்கு வருகிறது
கரம் கொடுத்து
காத்திடுவோம்
காசினியில் தூசியோனை

கவிஞர் தெருத்தூசியோன் எனும் இந்த வித்தியாசமான கலைஞனை இலங்கை வானொலி கலையகத்தில் சந்தித்தேன் இவரது கவிதைகள் கதைகள் கேட்டு சிந்தித்தேன் - என் கற்பனையை இவருடன் பகிர்ந்து கொள்வேன் கலையுலகில் நாமிருவரும் காதலர்களாகி விட்டோம் பாதையில் எங்களின் பாதக் கமலங்கள் பதிந்து சென்று கொண்டிருக்கிறது காரணம் சில்லறை பணம் இன்றி.........! அந்த மறக்க முடியாத நினைவுகளை உங்களிடமும் பகிர்ந்து கொள்கிறேன்-

புத்தகத்தை சுமந்து
புதுப் பொழிவுடன்
புறப்படுகிறார்
புத்தகத்திற்கு - உதவி
புண்ணியவான்களிடம்
கிடைக்கும் என்று
அந் நேரத்தில்
கவிஞரின் இதயம் பாடும்
மோகன ராகம்
திரும்பி வருகின்றார்
முகாரி ராகமுடன்
காரணம் அங்கே
எதிர் பார்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றமாய் போனதால்
இவர் நிலை
தடுமாற்றமானது............!

இப்படி வாழ்க்கையில் வரட்சியைக் கண்டும்
வாடாத இதயம் படைத்த தெருத்தூசியோன்
சமுதாயத்தை சாடும் விதம் அருமையாய் இருக்கின்றது
கடந்த காலங்களில் அலையாய் அலைந்து
அகிலத்திற்கு அருமையான ஐந்து நூல்களை தந்திருக்கிறார்
ஒளி இழந்த உள்ளங்களின் உள்ளக் குமுறலை
தனது முதலாவது நூலான

1. நாம் ஒளி இழந்த போது — என்று வாசக நெஞ்சங்களுக்குக் கூறியவர்,
2. ஆசைகளின் ஓசைகள்
3. சித்திரப் பூ விழி
4. நினைவுகளின் நிழல்
5. நான் காணும் உலகம்

இந்த ஐந்து புத்தகங்களும் ஐந்து வெவ்வேறு விடயங்களை சமுதாய பிரச்சனைகளை எடுத்துக் காட்டுகின்றன. இப்புத்தகங் களை வாசித்த நான், என் நிலை மறந்து நின்ற காலங்களும் உண்டு. கண்கள் இல்லாத போதும், கடவுள் கருணை உள்ளம் கொண்டு, நல்ல சிந்தனை முயற்சியை கொடுத்திருக்கிறான். இவரது அயராத முயற்சியால் பல இன்னல்கள் இருள் மேகங்கள் சூழ்ந்திருக்கும் வேளையிலும் தெருத்தூசியோனின் முதலாவது கவிதைத் தொகுதி குமுறும் குரல்கள் நந்தவனத்துப் புஷ்பமாய் நறுமணம் வீசிட வெளிவருகிறது..............

புதுக் கவிதைகள்
பூத்துக் குலுங்குகின்றன
பூவையரின்
புலம்பல்கள்
பாட்டாளியின் பதறல்
பாவையரின் உளறல்
விதவைகளின் குமுறல்
விடியமுன் அலறல்

இப்படி தேன் தமிழ் கவிதைகள் தேனாய் இனிக்கிறது. கவி ஞர் குமுறும் குரல்கள் என்ற இந்த நூலில் காலத்தின் கடிகாரம், என்ற கவிதையில் பள்ளி வாழ்க்கையின் பசுமையான அனுபவங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கூறி எம்மை வசந்த காலத்துக்கு அழைத்துச் செல்கிறார். இப்படி......... எல்லாக் கவிதையும் மணம் பரப்புகின்றன......... பாரதி கண்ட புதுமைப் பெண்கள் நவநாகரீக உலகில் கட்டுப் பாட்டை இழந்து போய்விட்டார்கள். என்பதை உணர்ந்து தூசியோன் இப்படி ஒரு கவி முழக்கம்... ......

பாரதி உன்
கல்லறையை நோக்கி — உன்
கவிதைகளை
உச்சரித்தபடியே
யாத்திரையாய் — நாம்
வருகின்றோம் — உன்
வார்த்தைக்கு — செவி
கொடுக்காதவரை செவியில்
பிடித்து வந்து — உன்
கல்லறைக்கு அருகே
நிறுத்துவோம்.

என்ன அருமையான கற்பனை இது மட்டுமல்ல உயர்ந்தவர்கள் எங்களைத் தெரியுமா...! நெருங்காதே என்னை..! இபபடி பத் தலைப்புக்கள் தனிததுவமாய் திகழ்கின்றன குமுறும் சமுதாயத் தின் குரல்கள் ஒவ்வொன்றையும் கவிதைமூலம் எடுத்துக் காட் டியிருக்கும் இவரது எழுது கோல் பெருமைக் குரியது நம் நாட்டிலும் ஒரு ஜோன மில்ட்டன் இருக்கிறார், கண் இழந்த வர்களுக்கு தெருத்தூசியோன் முன்மாதிரியாக திகழ்கின்றார், இவரை வாழ்த்த வேண்டியது தமிழின் பால் தீராத மோகம் கொண்டவர்களின் கடமையாகும் .....!

குமுறும் குரல்கள் கவிதைத் தொகுதியில் இந்த ஏழை எழுத்தாளனின் எழுது கோலுக்கு வேலை கொடுத்த நண்பன் தெருத் தூசியோனை வாழ்த்தாமல் இருக்க முடியாது...!

காலங்கள் உன்னை வாழ்த்த வேண்டும்
காவிய நாயகனாய் திகழ வேண்டும்
காசினியில் தூசியோன் புகழ் ஓங்கவேண்டும்
காலத்தை வென்று வாழ வேண்டும்

என வாழ்த்தி விடைபெறும்

என்றும் உங்கள்
ப்ரியமுள்ள
எஸ். எம். ரவி
பூல் பேங்க டிவிஷன்
ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நாட்களும் . .

என் கவிதைக் காணியில் கவலைக் கன்றுகளை நாளுக்கு நாள் நான் நாட்டி வருகிறேன். என் கவலைக் கன்றுகளைக் களைந்துவிட வேண்டுமென்று விரும்பியோர் என் கவிதைக் காணிக்குள் கால் பதித்தனர். கடைசியில் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. மாறாக என் கவிதைக் காணியிலிருந்து வெளியேறும்போது வேறு பல கவலைக் கன்றுகளை நாட்டிச் சென்றனர். இதனால் என் கவிதைக் காணி, சோகத்தின் சோலையாய் மாறியது. என் மனமோ இதைக் கண்டு சீறியது. என்னைப் பண்படுத்த வந்தவர்களே, என்னைப் புண்படுத்தி விட்டார்களே என்று என் இதயம் பேதலித்தது. இதன் பின்னரே என் கவிதைப் பூக்கள் உதிர்ந்து போயின. இப்பூக்கள் உலகத் துக்காக உதிர்கின்ற என் உதிரப் பூக்கள். இரு விழியிழந்த என்னால் இதிகாசங்களை இயற்ற இயலாமல் போனாலும், சிறு காப்பியங்களைச் சித்தரிக்க சிந்தை இடங் கொடாமல் போனாலும், இந்த சின்னஞ் சிறு கவிதைத் தொகுதியை வாசகர்களுக்காக தொகுத்துத் தருவதை நினைக்கும்போது என் நெஞ்சம் சிரிக்கின்றது. இதில் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு காரணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கின்றன. இதை வாசித்து நீங்கள் பயன் பெற வேண்டுமென்று நான் ஆவலாய் இருக்கிறேன். என் ஆவல் அதி காலையிலே உதயமாகி, மாலையிலே அஸ்தமித்துப் போகும் சூரியன் போன்றதல்ல. என் ஆவலை அளப்பதற்கு அளவுகோல் யாரிடமும் இருக்க முடியாது. அதற்கான அளவுகோல் என்னி டமே உண்டு. அதைத்தான் திருப்தி என்று சொல்வார்கள்.

1986ம் ஆண்டு நான் எழுதி வெளியிட்ட முதலாவது புத்த கத்திலிருந்தே, என் கற்பனை மாளிகையில் சேர்த்து வைத்த கவிதைகளுக்கும், கட்டுரைகளுக்கும் கணக்குக் கிடையாது. இவற்றை களஞ்சியப்படுத்த நான் முயற்சி எடுத்தபோது, குடிக்கும் கஞ்சிக்கு வழியின்றி கைகளைப் பிசைந்த அனுபவங் களை எழுதாமலிருக்க முடியாது. எந்த நிலை வந்தாலும் அவலநிலை என்னைத் தொடர்ந்தாலும், என்னால் எழுதாம லிருக்க முடியவில்லை. எனவே என் எழுதுகோலை எடுத்து எழுதுகிறேன். என்னைப் பற்றியல்ல என்னோடு பின்னிப் பிணைந்த உறவுகள் பற்றி உங்கள் கண்களில் கண்ணீர் வடிந் தால், என் பேனா கரங்களாக மாறி உங்கள் கண்களைத் துடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை வெடிகள் வெடித்து, காலத்தின் கன்னங்களை காயப்படுத்துகின்றன. துயரத்தின் துண்டுப் பிரசுரங்கள் சமூகத்தில் விநியோகிக்கப்படுகின்றன. அநியாய அலங்காரங்கள் மலிவு விலையில் விற்கப்படுகின்றன. போலிப் போர்வைகளை போர்த்துக் கொண்டு பொழுது போக்காய் புல்லாங்குழல் ஊதப்படுகின்றன. இத்தனைக்கு மத்தியிலும் சமூகச் சக்கரம் சங்கடப்பட்டு சுழன்று கொண்டிருக்கின்றது. அச்சக்கரத்திற்குள் நானும் ஒருவனாக நின்று நிதானித்து நிலைப்பாட்டின் நிலமைகளை வெளிப்பாடாய் விளக்கும் போது என் கையிலும் விலங்குகள் மாட்டப்படுகின்றன. இப்படியான காலகட்டத்தில்தான் ஒரு கலைஞனுடைய கலைப் படைப்புக்கள் கல்லறைக்குள் கண்ணுறங்கிப் போகின்றன. ஆனாலும் இந்த நிலையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக ஒரு கலைஞன் எழுதுவானேயானால் அவன் வையத்தில் கலைஞனாகிறான். இல்லையேல் கொலைஞனாகிக் கொலைக் களத்திற்குப் போகிறான்.

என்னைப் பொறுத்தளவிற்கும் காலத்தின் கட்டாயத்திற்குள் கட்டுப்பட்டிருப்பதால் கைகளைக் கட்டிக்கொண்டு எழுதும் கடதாசிகளை மூக்கால்மட்டும் நுகர்ந்து பார்க்க முடிகின்றது தொடர்ந்தும் இந்நிலை தொடருமானால் காலம் தான் இதற்குப்பதில் சொல்ல வேண்டும்.

குமுறும் குரல்கள் என்னும் இந்தக் கவிதைத் தொகுதி எனது முதலாவது கவிப்படைப்பாகும். காரிருள் மத்தியிலிருந்து ஒரு பௌர்ணமி நிலவை எதிர்பார்த்து ஏமாந்து போன என் கண்களுக்கு கவிதையாய் வரும் இந்த நிலவுகள் கனவுகளாய் வரும் உறவுகளை உன்னிப்பாய்ப் படம்பிடித்துக் காட்டுகின்றன, வசந்தகாலத்தினூடாக அழைத்துச் செல்லும் உங்களை இடையிடையே இலையுதிர் காலத்தின் காட்சிகளையும் தங்கள் கண்களிற்குக் காட்டுகிறேன். காணாதவற்றைத் தங்கள் கண்ளிற்குக் காட்டவில்லை கண்டும் காணாதவர் போலிருப்பவர்களுக்கே உண்மைநிலையை உணர்த்த விரும்புகின்றேன் கானகத்துக் கவிகுயில்களை நான் அழைத்து அவை சொல்லிடும் சோகங்கள உங்களிற்கு சுவையாய்ச் சொல்லும் போது நானல்லவா சுமை தாங்கமுடியாமல் சுருண்டு போகிறேன் பரவாயில்லை பாலைவனத்தின் ஊடாக நான் பயணம் செய்து ஓர் பால்நிலவை உங்களுக்காக அழைத்து வருகிறேன், உங்களைத் தேடிவரும் இந்தப் நிலாவிடம் உங்கள் பார்வையாலேயே பதில்சொல்லி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்நிலாக்களைத் தேடி வாடிப்போன உள்ளங்களே என தேகத்தைத் தேன்நிலவாக்கி உங்களுக்குத் தருகிறேன். உங்கள் சோகத்தைச் சுட்டெரித்து என் கவிதைப்பூங்காவின் வாசலுக்கு வாருங்கள் உங்களை வாரியணைத்து குமுறும் குரல்களின் குடியிருப்புக்களில் தங்குமிடம் அமைத்துத் தருகிறேன். நிம்மதியாய் நீங்கள் தங்கி சுதந்திரக் காற்றைச் சுவாசியுங்கள்.
வாசக நெஞ்சங்களுக்காக என் இலக்கிய மாளிகையில் இளைப்பாறும் இடங்களை அமைத்து வைத்திருக்கிறேன் நீங்கள் இதில் வந்து இளைப்பாறிப் போகலாம். நீங்கள் என் மாளிகையில் இளைப்பாறும் போதுதான் என்னால் நிம்மதிப் பெருமூச்சை விடமுடிகிறது.

உங்களுக்காகவே கட்டிய மாளிகையில் நீங்கள் நிம்மதியடையும் போது எனக்காக இலக்கிய மாளிகைகளைக் கட்டியவர்களின், பெயர்களை உள்ளத்தால் உச்சரிக்கிறேன். என் கவிதைக் கண்களைத் திறந்துவிட்ட கல்வியூர் விஜயபாரதி இருண்ட என் இலக்கியப் பிரதேசத்தில் இப்போது இருவிழியாய் இருக்கும் எஸ். எம். ரவி ஆகியோரின அன்பு அரங்கில் நான் அமைதியாய் இருக்கிறேன். இந்நூலை அச்சுக்குள் அச்சறுக்கைப்படுத்தி அழகாய் அச்சிட்டுத்தந்த என் அன்புக்குரிய இம்ரியாஸ் அவர்களுக்கு நான் நன்றி என்று சொல்லமாட்டேன் தமிழில் இதைவிட ஏதாவது ஒரு உயர்ந்த சொல்லொன்று இருந்தால் அதையே அவருக்காய்ப் பாவிக்க முடியும் ஏனென்றால் எனது முதலாவது கவிதைத் தொகுதி இவரின் உதவியாலேதான் வெளிவருகிறது மேலும் என் இலக்கியப் பயணத்தில் கைகோர்த்து வரும் கலைஞர் கூட்டத்திற்கும் நன்றி மலர்களை சமர்ப்பிககிறேன். இச்சோலையினூடாகப் பயணத்தை முடித்த பின்னர் உங்கள் கருத்துரைகளை எனக்கு எழுதியனுப்புங்கள் அவையே நாளை இந்த ஏழை எழுத்தாளனை எழுச்சிக்குரிய பாதையில் வழிநடத்திச் செல்லும்.

உங்கள்
அன்புள்ள
**தெருத்துாசியோன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூயி...!

பார்வையற்றோரின் பாழடைந்த வாழ்கையினை
பாரினிலே பளிச்சிட செய்தார்
பாவலர் லூயி..!

ஆறு வயதினில் அவர் ஒளி இழந்திட்டாலும்
அஸ்தமித்துப் போகவில்லை
அவர் வாழ்வு!
அயராத அவரின் உழைப்பு...
லூயிக்கு கொடுத்தது
நல் உயர்வு

ஆறு குற்றுக்களால் ஆனது
லூயின் பிரையில் எனும் எழுத்து
இருல் சூழ்ந்த விழிகளுக்கு
அருள் கொடுக்கும்
அறிவுச் சுடராய்
அமைந்தது அவ்வெழுத்துக்கள்
விழி கொடுத்தார்
விழி இழந்தோர்க்கு லூயி...

கல்வியை கற்கவும்
கவிதைகள் வடிக்கவும்
காலத்தை பொன்னாய் கழிக்கவும்
காலத்தை அழியாத
கண்டு பிடிப்பை கண்டு பிடித்தார்
கண் இழந்தோர்க்கே...!

லூயியின் பெருமையெல்லாம்
ஒளி இழந்த கண்களே
ஒளிவு மறைவின்றி
எடுத்துரைக்கும் பாரினிலே...!

1989ம் ஆண்டு
வானொலியில் ஒலிபரப்பானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை ஓங்கட்டும் !

பல்லாண்டு காலமாய்
பாரினில் நாங்கள் அனைவரும்
பாகு பாடு இன்றி
வாழ்ந்து வரும் வரலாற்றில்;
இனி என்ன எமக்கு ;
தகராறு
இலங்கை திருநாட்டில்
கலப்பட மொழியாய் :
கன காலம் ;
ஒற்றுமையாய் ;
ஓவியம் வரைந்தோமே ;
முஸ்லிம்கள் தமிழர்கள்;
என்று வேற்றுமையை;
வேர் அறுத்து
எல்லோரும் ஓரினம்:
என்று செய்தியினை
செவிகளுக்கு,
எட்டச் செய்வோம்;
எட்டு திசையும் :
இதனை முழங்கச் செய்வோம்
ஒரு தாய் பெத்த பிள்ளைகள்:
நாம் என்பதை
நான் நிலமும்:
அறியச் செய்வோம்;
மதனும் மையூட்டும்;
மச்சான் போல் நடக்க
பாத்திமாவும் பரமேஸ்வரியும்;
சகோதரிகளாக வாழ:
சமூகத்தில் புதிய;
புரட்சி செய்வோம்:
இச் சங்கதிகளை
இத் தரணியிலே
புதிய வரலாறாய்
வரைந்து வைப்போம்:
நிகழ்கால நிலைமைகளால்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மூலமான
நெஞ்சங்களில்
எதிர் ஒலிகள்
கலந்து வரும்;
கசாப்புக் கடை ஒலிகள்
சகோதரர்களை சகோதரர்கள்
அகதிகள் ஆக்கிய
அநாகரீக செயல்கள்
அந்தமான் தீவுக்கு
அனுப்பிய அடிமைத்தனங்கள்
கௌரவிக்கப்பட்டவர்களின் கைகள்
கத்திகள் வைக்கப்பட்ட
கரைகள் படிந்த கதைகள்
மானில மாற்றத்திற்காய்
மாடாய் உழைத்தவர்கள்
தேசப் படத்தில்
கறுப்பு மையால் கோடு இடப்பட்டவர்கள்
மாற்றத்தின் மறுமலர்ச்சிக்காய்
உயிரை கொடுத்த உத்தமர்கள்
உதாசின உதைகளால்
வில்லங்கமாய் வெளியேற்றப்பட்டவர்கள்
இவற்றுக்கெல்லாம் இன்றே
ஓர் விடிவு
பிறந்திட அனைவரும்
கரங்களில்
ஒற்றுமை கொடிகள் பிடிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களைத் தெரியுமா . . . ?

நாம் பாடும் பல்லவி இல்லா பாடல்
இன்னமும் உங்களுக்கு கேட்கவில்லையா......?
வறுமை பட்டவரின் வரலாற்றில்
கொடுமை நினைவுகள் வயிற்றின்
பசிக் கொடுமை போக்க...
காலம் முழுவதும் கண்ணீர்
கால் வாய்களை கட்டி
பசியின் பரிதாப பாத்திகளை அமைக்கிறோம்......!

நாங்கள் நாட்டுக்கு உழைப்பவர்கள்
நிச்சய நிதர்சன வாதிகள்
நியாயங்களில் நித்திரை கொள்பவர்கள்
பஞ்சனை மெத்தையில்...
படுத்து உறங்குவோரே
பாட்டாளிகள் நாங்கள்
குடிசைகளில் இருந்து
குழலூதும் சத்தம் – உங்கள்
மௌனங்களை மறுதலிக்கவில்லையா...!

வயல்களின் வரம்புகளில்
வரட்சியை தாங்கி
உணர்ச்சியோடு நிற்கும்
புல்லினங்கள் போன்றவர்கள் - நாங்கள்
எதற்கும் ஈடு கொடுக்கும் இதயங்கள்
எம்மிடம் இருப்பதினால் - தான்
நாம் இன்னமும் உழவர்கள்–என்று
அழைக்கப்படு கின்றோம்...!

நாங்கள் உழுவது பண்படுத்திய
பாரினை மட்டும் அல்ல...
மனிதாபிமானமற்ற மனங்களையும்–தான்
நாங்கள் நாகரீக உலகின்
நலிவடைந்த நல் இதயங்கள்
இருந்தாலும் இயற்கையோடு
ஒட்டி உறவாடும் உற்ற
நண்பர்கள் நாங்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக் காலத்தின் மருமக்கள்
சூரியனின் சொந்தக்காரர்கள்
நிலா வெளிச்சத்தின்
நேர்முக வர்ணணையாளர்கள்
ஓ இன்னமும் நீங்கள்-எங்களை
புரிந்து கொள்ளாவிட்டால்
எங்கள் புதை குழிகளில்
பூத்துக் குலுங்கும் பூ...க்களிடம்
வந்து கேட்டுப்பாருங்கள்...!

நாங்கள் எங்கள் பிரச்சனைகளை
இயற்கையிடம் முறையிடுகின்றோம்
அவர்கள் எங்கள் பிரச்சனைகளை
தீர்க்கும் தீர்ப்பாளிகள்
எங்கள் நம்பிக்கையின்
விதைகள் நாற் திசையிலும்
வீசப் படுகின்றன
கிராமத்துக் கிளிகளிடம்-எங்கள்
துயரக் கதைகள் பரவலாய்
பேசப் படுகின்றன..!

கிராமங்களில் உள்ள தெருக்களிலும்
அங்கே வீசும் காற்றிடமும்
நிமிர்ந்தும் வளைந்தும்
நிற்க்கும் மரங்களிடமும்-எங்கள்
கதைகளை கேட்டுப் பாருங்கள்
அவைகள் மீதி விடாமல்
காவியமாய் எங்கள்
கதைகள் கூறி முடிக்கும்...!

நீண்ட நெடும் கணக்குகளில்
விவசாயிகளின் விஸ்தரிப்புக்கள்
விளக்கமாய் விபரிக்கப் படும்
பரந்த எம் பட்டியலை-படிக்க
பாராளும் வேந்தர்களே...
விரைந்து வாருங்கள்...!

கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில்
1988ல் ஒலிபரப்பானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்திருப்போம் . . .

புத்தாண்டு பூக்கள்
புவியெங்கும் பூத்து
அனைவர் வாழ்விலும்
ஆனந்த தீபமாய்
அகல் விளக்காய்
எரிந்திடவே......
இரு கரம் கூப்பி
இளையவள் உன்னை
வரவேற்று
வாழ்த்திசை பாடுகின்றோம்......!

சந்தோஷமாய்
சமாதானமாய்
சச்சரவின்றி
சகலரும்
சாதி மத பேதமின்றி
சந்தனத்தின் வாசனையாய்
சங்கொலிகள் கேட்டிடவே
சங்கீதம் இசைத்திடவே
சங்கங்கள் முழங்கிடவே
அன்புடனே உனை
வரவேற்று
அணிவேன் பலகோடி
ஆரங்கள் உனக்காக...!

நடந்ததை மறந்து
நடப்பதை நினைத்து
நாங்கள்
நாளை வரும்
புத்தாண்டில்
வளர் பிறையாய்
வளர்ந்து
வாழ்விலே
வளமுடன் சிறந்து
வாழ்வோமே யாவரும்
வறுமையினை மறந்து...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரங்க அவல நிலை...!

மனம் என்ற தோட்டத்திலே
மலர்கின்ற நினைவுப் பூக்களே...
நித்தமும் நித்திரையில்
நீங்கள் என்னைக் குளப்புவதேன்
நிம்மதியை நான் இழப்பதேன்...!

ஏக்கங்கள் என் வாழ்வில்
ஏராளமாய் குவிகின்றதேன்
என்ன செய்வதென்ற தடுமாற்றம்
என்னை தடுமாற வைப்பதேன்...!

வேதனையும் சோதனையும்
வேள்விக் கடாக்களாய்
விற்பனைக்கு விரைவாக
விலைபோக வைக்கிறது
விரத்திகளும் வெறுப்புக்களும்
என்னைத் தொடர்ந்து வருகின்றது...!
வாழும் வழி தெரியாது - நான்
வளம் இழந்து போகின்றேன் !

நெருப்பான நினைவுகள் - என்
நெஞ்சை சுட்டெரிக்கும் போது-நான்
எப்படி நீலாம்பரி ராகம் இசைப்பது
இன்பத்தின் இடைவெளிக்குள்ளே
இன்னமும் இன்னல் மழைத்துளிகள்
இருள் சூழ்ந்த மழை மேகங்கள் - என்
விழித்திரையில் விழும் விலங்குகள்...!

நான் நம்பிக்கை அற்றநிலையில்-ஓர்
நட்சத்திரத்தை எதிர்பார்த்து
எதிர்காலத்தில் ஏமாந்து போகப் போகும்
என் நிலை ஒரு
பெறும் அவல நிலை ..!

இக் கவிதை 1988ம் ஆண்டு வானொலி,
வாலிப வட்டம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கடிகாரம்!

பள்ளி செல்லும் வயதினிலே
துள்ளி வரும் இனிமைகளே
பள்ளியறைப் படிப்பினிலே
பாவையரின் நினைவுகளே

பாடப் புத்தகங்களுக்குள்
பதுக்கிய காதல் கடிதங்கள்
பாரதத்தின் பக்கங்களாய்
நீண்டு செல்லும்
நினைவுக் கொடிகள்

வாலிபத்தின் வயதுக் கோளாறுகள்
வாங்கித் தந்த தகராறுகள்
செல்லும் இடமெல்லாம்
செல்வியரின் பெயர்களை

சிலைகள் போல செதுக்கினோமே
கல்லூரிக் காலத்தில்
கலியுகத்தின் ரோமியோ ஜுலியட்
வேட்டிகள் மாற்று வது போல்
வேசங்கள் போட்டோமே...

கம்பராமாயணம் கற்பிக்கும் போது
கமலிக் கோர் கடிதம்
கணக்கு பாடத்தின் போது
கவிதாவுக்கு ஒரு கவிதை
சுகாதாரத்தின் போது
சுந்தரிக்கோர் சுரண்டல்
சமய பாட நேரத்தில்
சங்கீதாவுக்கு சட்டென்றோர் சைகை

இப்படியே இங்ஙனமாய்
பாடக்குறிப்பு க்களுக்குள்
குறித்து வைத்த
வஞ்சியரின் வரை படங்கள்

எங்கள் இதயங்களில் அவை
எடுத்த இடங்கள்...
இத்தனையும் போதாதென்று
ராக் கெட்டுக்கள் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வியர் சிரசிலெறிந்து
கல்வியையும் மறந்தே
கல்லூரிக் காலத்தில் வாழ்ந்தோமே

மாலை வேளையில்
மங்கம்மா வீட்டில் மாங்காயும்
கெங்கா அக்கா வீட்டில்
கொய்யாக்காயும் பதுங்கி-நின்று
பிடிங்கிச் சாப்பிட்ட பொழுதுகள்...

விளையாட்டு மைதானத்தில்
விபரீதமாய் நடந்து
கால்களை உடைத்துக் கொண்ட
அனுபவங்கள் அத்தனையும்
செயற்படுத்தும் போது
தேனாய் இனித்தது அந்நாட்களில்

கல்லூரி காலங்கள் கழிந்து
வருடங்கள் பல கடந்த பின்
கல்லூரிச் சட்டங்களை
மீறியதன் குற்றங்கள்

பட்டங்கள் வாங்கிடாத
கட்டங்கள் இவையெல்லாம்
கல்வியை கவனமெடுத்து
கற்காதமைக்கு கிடைத்த வருமானங்கள்

இவற்றை யெல்லாம் வீதியிலே
வேலை தேடி அலையும் போது
நாங்கள் உணர்ந்து கொண்ட
அர்த்தமற்ற மன மாற்றங்கள்...!

1988ல் பாவளம் வானொலி நிகழ்ச்சியில்
ஒலிபரப்பானது.

## நீச்சல்!

பிணங்கள்
மீன்களுக்கு
நீச்சல்
பழக்குகின்றன......!

## புதிய வியாபாரம்!

இவர்கள்
அவமானங்களை
விற்று
விமானங்கள்
வாங்குகிறார்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை தஞ்சம்.

வேகக் கொதிக்கும் வெய்யினிலே
வேதனைத் தீ நெஞ்சினிலே
என் எண்ணங்கள் யாவும்
எரிமலையாகையிலே விருப்பமின்றி
வீடு நோக்கி நடக்கின்றேன்...!

என் வீட்டில் உடைந்த பானைகள்
ஓராறு கண்ணீரிலே
ஓவியம் வரைந்து வைக்கும்
வறுமையின் அழைப்புக்கள்
வண்ணத் திரையிடும்

என் நடையும் தளரயிலே
உடலில் உள்ள
உடையும் களரையிலே
களரும் உடையில்
கைகளால் அனைத்து
தொடரும் பசியுடனே
துன்பத் தூண்கள்
தோலில் சுமந்து
பாதையில் பாவி நான் நடக்கின்றேன்...!

நிகழ் கால நிலைமைகளை
நினைத்து
சொந்தங்கள் சுடுகாடாய் மாறியதே
பந்தங்கள் பாலை வனமாய் ஆகியதே
உறவுகள் ஊமையானதே
உள்ளம் உருக்குலைந்ததே...
தனிமையே தஞ்சமானது

இக் கவிதை 1988ல் எழுதப்பட்டது.

# சன்னி . . . !

வன்னியில்
கண்ட
கன்னியை
எண்ணி
எனக்கு வந்தது
சன்னி.........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்கப்பட வேண்டியவை..!

ஆடைகளை அகற்றிவிட்ட
அந்த ஆல மரங்கள்
ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கையில்
வேதனை விழுதுகளை
மண்ணில் வேரூன்றிக் கொள்கின்றன..!

வறட்சியின் வருமானங்கள்
அந்த ஆலமரங்களுக்கு
ஆடைகளை அபகரித்து...
அவமானங்களை
அன்பளிப்பாக்கிக் கொண்டது...!

வேதனையின் விழுதுகள்
விறகுகளாய்ப் போடப்பட்டபோது
சமையலின் சரித்திரத்தை
ஆலமரங்கள் சுமக்கத் தொடங்கின...!

ஆலமரத்தின் இனிய வசந்த காலம்
இரவலாய் அடைவு வைக்கப்பட்டபோது
இலைகள் விலைமாதர்களான
விறைப்பான புதிய கதையொன்று
புவியில் பரவத் தொடங்கியது...!

ஒரு கிராமத்தின் நிழல்
கனலான போது
ஆலமரச் சருகுகள்
பல சாம்பல் பூக்களை
சரித்திரப் பூக்களாக்கின்றன
மரங்களின் மதிப்பீடுகளை
மந்திகள் கணக்கெடுத்தபோது
மக்கள் புதிய
நிழகளை நோக்கி
விரைவு பெற்றனர்

1989ல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்தவர்கள்.

நாங்கள் கமக்காரர்கள்
நாகரீக உலகின்
நம்பிக்கை நட்சத்திரங்கள்

எங்கள் வாலிப வயதின்
பருவங்களைக் கூட
நெல் விதைகளோடு கலந்து
நேற்றே விதைத்து விட்டோம்

கால வேகத்தின் விரைவிற்குள்
நாங்கள் களைகள் களைகின்றோம்
எங்கள் கால்கள் சேற்றிலே
படும் போது தான்
மாடி வீடுகள் சோற்றிலே
கை வைக்க முடியும்...!

நாங்கள் கலப்பைகளை
கல்யாணம் செய்து கொண்டவர்கள்
எங்கள் கன்னியர்கள்
தங்கள் காதல் வரிகளை
வயல் வெளிகளில்
வரைந்து பார்க்கின்றனர்...

நாங்கள் இயற்கையின் இதயம் கவர்ந்தவர்கள்
என்ன தான் இருந்தாலும்
நாங்கள் வறுமைக்குள் வரையறுக்கப்பட்டவர்கள்
ஆனாலும் குடிசை வீடுகளிலுள்ள குதூகலம்
கோபுரங்ககளில் இல்லை
நாங்கள் உடல் உழைப்பால் உயர்ந்தவர்கள்

---

## ஒற்றுமை.

நான்
சாப்பிட்டு
கை கழுவுகையில்
என் தங்கை
சாப்பிட
கை கழுவுகிறாள்
ஒற்றுமை
கை கழுவுவதில்
மட்டும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரியவர்கள்.

இலங்கையின் இரவுகள்
இனியக் காலைப் பொழுதை
காண்பதற்குக்
சூரியக் கதிர்களாய்
சுடர் விடும் ஒளிகள்
மலையக மணிவிளக்குகள்...!

அன்று ஆங்கிலேயர்
இந்த இலங்கையை
அடிமைப்படுத்திய ஆண்டு
முதலாய் முதுகு வளைத்து
முகத்தின் வியர்வை வடிய
வாழ்நாள் முழுதும்
உறுதியுடன் உழைக்கும்
தேசத்தின் நேச நெஞ்சங்கள்...!

நம் நாட்டின்
வரலாற்றில் வருமானத்தில்
கூடுதலாய் கொழுந்துக் கூடைகள்
சுமக்கும் கோபுரக் குடும்பங்கள்
குறைந்த ஊதியத்தை
உறிஞ்சிக் கொள்ளும்
சேவையின் செல்வங்கள்

எமது தேசத்தின்
தேசிய வருமானம்
தேறுவதற்கு
தேகத்தை தேய்க்கும்
தேசத்தின் தூண்கள்
அரசாங்கத்தின் அச்சாணிகள்...!

அயல் நாடுகளில் புயல்
பூமியதிர்ச்சி வெள்ளப் பெருக்கு
இப்படி இயற்கை
அனர்த்தங்கள் அழிவுகள் ஏற்படும்
எந்த நேரத்திலும்
எம் தேசத்தின்
இரத்தினபுரி இரத்தினமும்
சிலாபத்தின் மூத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார்க் கருவாடும்
அநுராதபுர அரிசியும்
அவசர உதவியாய்
இங்கிருந்து அனுப்பப்படுவதில்லை
மாறாக மலைநாட்டு
தேயிலையே
நிவாரண கோரிக்கைக்கு
கை - கொடுத்து உதவி வரும்...!

உற்ற உடன் பிறப்புக்கள்......!
மலையக மக்களின்
பெருமை தானே
பெருமளவில் எழுத
என் பேனாவுக்கு
சக்தியில்லை ..!

மலையக மைந்தர்களே
இந்நாட்டின்
பொன்மணிகள்
எங்களின் கண்மணிகள்...!

---

## காரணமற்ற கவலைகள்..!

கற்பனை தொட்டினிலே
கன்னி உன்னை உறங்க வைத்து
விற்பனைக்கு விலைபோக
விடியலை உன் விழிக்குள்-நான்
விதைத்திடுவேன் எந்நாளும் ..!

காலங்களிடம் கடன் வாங்கிய
கனவுகளைக் கயிறாய்த் திரித்து - உன்
தூக்கத்தை நான்
தூர அனுப்பிடுவேன்
துகிழ் கலைந்து கண்ணே-நீ
கண் விழிக்கையிலே - என்
கற்பனை சக்கரம் சடுதியாய் நிற்க்கும்...!

சக்கரம் நின்ற வேகத்தில் - அது
சுற்றிய சுழட்சியில்
சுருண்டு போன - என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமைகள் சுகங்கள்
சுட்டெரிக்கும் சோகங்களைத்
தந்து செல்லும்
நிஜங்கள் நிராகரிக்கும்
நிழலான கற்பனைகளில்
நித்தம் நீ வந்து போவதும்
என் - கற்பனை களைந்து - நான்
கண்ணீர் வடிப்பதும்
காரணமற்ற கவலைகளே!

# ஒரு பிரிவின் பிரியாவிடை..!

என் நினைவுகளின்
நீளங்களை அளப்பதற்கு
நீல மயிலே
அளவு நாடா
உன்னிடம் உண்டா...!
காதல் தரையை
குத்தகைக்கு நான்
எடுத்துள்ளேன் குமரியே
குத்தகைத் தரையிலே
குளிகள் தோண்டி
நீ
என் குதூகலத்தை
ஏன் புதைத்து விட்டாய்
அன்பே...
அடைக்களம் குருவியாய்
உன்னிடம் நான்
அடைக்கலம் புகுந்த போது
பூவிலங்காலே என்னை
பூட்டி வைத்தாயே...
உன்
விலங்குகளுக்குள்
நான்
கைதியான போது
காலதித்தின் நகர்வையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்தே விட்டேன்
நீ
என்னை விலங்குகளில் இருந்து
விடுதலை செய்த போது
என் விழிகள்
ஏன் வியத்து போயின
தாலிக் கயிற்றை
கட்டி நான்
உன்னை தாரமாக்க
தவித்த போது தாரகையே
பிரிவுக் கயிற்றை
பிஞ்சி என் உள்ளத்தில்
நீ கட்டி
மணவறை காணவிடாமல்
கல்லறைக்குள் கண்ணுறங்க
விட்டாயே.. !

(1989 வானொலி)

## கர்த்தரின் கமக்காரர்கள்.

ஆலய வாசலுக்கு
வணங்க வந்தவர்கள்
வறுமை வனங்களில்
வனவாசம் புரிந்தவர்கள்

வறண்ட நாவினால்
நாதனின் பெயரை
பெருமூச்சுடன் உச்சரிப்பவர்கள்
கர்த்தரை நினைத்து

கண்களில் அருவியாகும்
கண்ணீர் ஆற்றை
கசங்கிய கந்தை துணிகளால்
அணைபோடும்
புரியாத புதிய
அணைக்கட்டு நிபுணர்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசரின் நினைவுடன்
நெற்றி விபர்வை
நிலத்தில் வீழ்ந்திடா
வண்ணம்
வயிராற பருகிடும்
பரமனின் பாடுகளின்
நினைவுச் சின்னங்கள்...!

பெத்தலகேமின்
பெரும் மழைக்காய்
காத்திருக்கும் இவர்கள்
கருணையின் செடிகள்

செழிக்கச் செய்ய
காத்திருக்கும்
கர்த்தர் கால் பதிக்கும்
காணிகளின்
கமக்காரர்கள்.........!

## இளமையின் ஏக்கம்...!

கவியாலே கட்டில் செய்து
காதலியே அதில் உன்னை
உறங்க வைத்து
காதோரம் காதல் கவிகள்
காளை நான் சொல்லிடவா......!

நித்திரையில் நீ மயங்கி
நிம்மதியாய் உறங்கையிலே
என் கற்பனை மையாலே
உன் கண்களுக்கு
மையள் தீட்டிடவா......!

பூவான உன் மேனியிலே
பூப்பறிக்க நான் வந்தால்
பூ விழியே பூ மழைகள்
பொழிவாயா.........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான இரவினிலே
உன் இதழ்களிலே
தேன் குடிக்க
வண்டாக நான் வந்தால்
வண்ண மலரே
தேன் மழை பொழிவாயோ...!
சுகம் தேடி உன்னிடமே
சுமையோடு நான் வந்தால்
சுமை இறக்கி வைப்பாயா...?
சூரியனாய் நான் வந்தால்
தாமரையாய் நீ இருப்பாயா...!
சந்திரனாய் நான் இருந்தால்
அல்லி மலராய் நீ மலர்வாயா
மரணத்தின் வேளையிலும்
மங்கை உன் நினைவுகள்
என் நெஞ்சில் நிறைப்பாயா

1988ம் ஆண்டு எழுதப்பட்டது.

# நெருங்காதே என்னை..!

என்
இதய தடாகத்தில்
உன்
புன்னகைப் பூக்கள்
தினம் தினம்
பூக்கின்றது
என்
விழிக் குலத்தில்
உன்
நினைவு நிழல்களை
நிதர்சன நிலா
நித்தமும் நிலை நிறுத்துகின்றன......!

என்
முகத்திற்கு
நீ எழுதிய
முதல் முன்னுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும்
முகவரி இடப்படாமலே
உன்
இதய அறைக்குள்.
ஏன்
என் முகவரியை
தொலைத்து விட்டாய்...!

தொலைத்து விட்ட
முகவரி தேடி
தொல்லை கொடுக்க
என்னிடம் வராதே
முல்லைப் பூவே
என்
முகவரி மட்டுமல்ல
அகவரிகளையும்
அவளிடம்
அர்ப்பணித்து உள்ளேன்...!

அவள் பரிசுத்த
பாதங்கள்
என் பிரதேசத்தில்
பவனிவர
நான்
அருகதையற்றயவன்.. ;

பெண்ணே
என்
உயிர்க் காற்றை
அவசரமாக அனுப்புகிறேன்
அதற்குஒரு
உன்னத உரை
எழுதுவாயா...?

## பற்றாக் குறை

பெண்களே
நிறைய :நிறைய
உடைகள்
வாங்கி

ஏன்
குறைய குறைய
போடுகிறீர்கள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதி . . .

பாதை ஓரத்தில் பள்ளி கொள்ளும்
பாவலர்கள்
தந்த செல்வங்கள்
பட்டினிப் பசி போக்க
பச்சைக் குழந்தைகளுடன்
பிச்சைகள் எடுக்கும்
எங்கள் தாய் குலங்கள்......!

குழந்தைகளின் அழுகைகளை
அடக்கிட
பகல் முழுதும்
பால் மா வாங்க
பணம் தேடி
அலைந்து ஈற்றில் எதுவும்
இல்லாத நிலையில்
ஓரிரவை
ஓராயிரம் ரூபாவிற்கு
அடைவு வைக்கும்
அந்தப்புர ராணிகள்......!

மானத்தை விற்று
மாதாந்தம் சீவியம் செய்திடும்
சிற்பிகள் செதுக்கிய சிலைகள்
இரவுகளை இரவல் கொடுத்து
இளமைக் காலங்களை
கண்ணீர் கோலங்களில்
கால் பதிக்கும்
புதுயுக கண்ணகிகள்.........!

இருந்தாலும் இவர்கள்
தேசங்களின் தௌ றல்களால்
நேசிக்கப்படும் பாரின்
பாசமலர்கள்
பூசை காணாத
பூம் பனி மலர்கள்........ !

காசினியில் கதிரவனும்
களங்கப் படுத்திட
முடிந்த இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின்
இன்ப வீடுகள்
காலத்தின் காம இச்சைக்குள்
கைதியாகிய கானகத்துக்
கவிக் குயில்கள்
கஷ்டத்தின்
கட்டாயத்தால்
கற்பை ஏலத்திற்கு விடும்
பரிதாபப் பருவங்கள்......!

## இக்கால இராமர்கள்.

சீதை சிறையிலிருந்த
ஸ்ரீ லங்காவில்
சம கால சகோதரிகள்
சிறையிலிருக்கிறார்கள்
அன்று அச் சீதையை
சிறையிலிருந்து மீட்டிட
வில்லேந்தினான்
இராமன்...!

இக்கால சீதையர்களை
இராவணர்கள்
சிறை வைத்திருந்தால்
இராமர்கள் மீட்டிருப்பார்கள்
இராமர்கள்
இவர்களை
சிறை வைத்திருக்கையில்
இவர்களுக்கு இப்போது
விடுதலை எங்கே..?

சீதன சிறைக்குள்
சிக்கியிருக்கும்
இவர்கள்
சீதன சிறையுடைக்க
சிலர் சிங்கப்பூர்
விருப்பமின்றி விரைகின்றனர்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கிற்கும் மனமின்றி
பல பாவையர்கள்
பயணமாகின்றனர்
சிற்றின்ப சிறைக்குள் மட்டும்
சில காலம் குடியிருத்தும்
கோபுரத்துக் குபேரர்கள்
காரியம்
காலாவதியானதும்
கைதிகளைக் கை கழுவி
அவசரமாய் அனுப்புகின்றனர்...!

காலங்கள் அவர்களை
கலியாணச் சந்தையில்
மலிவு விற்பனையில்
மந்தைகளாய் மாற்றுகிறது...!

சிந்தை சிதைந்து நிற்கும்
சின்னஞ் சிறிசுகளின்
விம்மல்கள்
விளக்கின் வெளிச்சம் - போல்
அணைந்து போகிறது
அந்தப்புர ராணிகளை
அல்லும் பகலும்
தேடியலையும்
இந்த ராஜாக்களுக்கு
இந்த ரோஜாக்களின்
இதயத் துடிப்புக்கள்
தூரத்தே கேட்கும்
தும்மல் சத்தங்கள் தானே...!

வெறும் கைகளுடன்
வெளி நாடு சென்று
சம்பளங்கள் சம்பாதித்து
வஞ்சியர்கள் வந்தால்
திருப்தியுடன் திருமணத்தை
செய்பவர்கள் சிலர்
பணத்திற்காய் அவர்கள்
அழகிற்காய்...

கைப் பிடித்து
கட்டியணைத்து
அந்தரங்க ஆராய்ச்சி
நலம் பட நடத்தி
அத்தனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்தமித்துப் போகையில்
அவர்களை
மீதியேது மிருந்தால்
எடுத்து வாவென்று
விரைவாய் வீட்டிற்கு
விரட்டும்
இக்கால இராமர்கள்...!

இப்படிப் பட்டவர்கள்
இத் தரணியில்
இருக்கும் வரை
சீதையரின் சிறையிருப்பின்
விலங்குகள் விலகாது...?

சீதனம் தேடி
வாடிப் போன வஞ்சியரே
வாழ்கையொன்று
உங்களுக்கு உண்டு
கலியுகத்து ராமர்களை
நம்பாது
கலியுகத்து இராவணர்களை
நம்புங்கள்

உங்கள்
நம்பிக்கைகளின்
பெறுபேறுகளை
பெரிதும்
எதிர்காலமே
நிச்சயிக்கும்...!

## கோரிக்கை.

கொழும்பு
கோபுரங்களில்
வாழும்
கொடை வல்லல்களுக்கு
ஒரு
அன்பான
கோரிக்கை
கடற் கரைகளில்
குடைகளுக்குள்
குடும்பம்
நடத்துபவர்களுக்கு
கடைசி
ஒரு குடிசை
வீடாவது
கட்டிக் கொடுக்கக்
கூடாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக எழுந்திரு.

பாரதி கனவுகள்
கண்டிருப்பார்
அதில் புதுமைப் பெண்களை
பாத்திருப்பார்
பின் கவியாய்
அவற்றை வடித்து வைத்தார்...!

எட்டுத் திசையிலும்
ஏட்டிலும் அதனை
விளங்கச் செய்தார்
கற்பு நெறி ஒழுக்கத்தை
உயர்த்தி வைத்தார்...!

கட்டாயம் கன்னியர்க்கு
கட்டுக் கோப்பு தேவையென்றார்
பெண்ணடிமை
அகல வேண்டுமென்றார்
பேதையர் பேதலித்து விடும்
பெரு மூச்சை நிறுத்த
பெரிதும் உழைத்து
நின்றார்...!

பாவம் பாரதி
கலியுகத்துக் கன்னிகளிடம்
நீ தோற்று விட்டாய்
கவலைப் படாதே
கலங்காதே...!

காலத்தின் கட்டவிழ்க்க
கவிஞர்களின்
கைகளுக்கு
கைமாறாக நீ கொடுத்த
புரட்சிப் பேனா
இன்னமும் எம்மவரிடம்
பத்திரமாய்
பல தலை முறையாய்
பாவித்து வருகிறோம்
இப் பேனா நம் மத்தியில்
இருக்கும் வரை
நாம் எவருக்கும் அஞ்சோம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி உன்
கல்லறையை நோக்கி
உன்
கவிதைகளை உச்சரித்த படியே
நாம்
யாத்திரையாய் வருகின்றோம்
உன்
வார்த்தைக்கு செவி கொடுக்காதவரை
செவியில் பிடித்து வந்து
உன்
கல்லறைக்கு அருகே
நிறுத்துவோம்... !

சமூகச் சந்தையில்
திருந்தாத மந்தைகள்
இவர்கள் என்று
திரும்பி ஓர் தடவை
நீ
பாட வேண்டும்
இதற்காகவே
நீ
எழுந்திருக்க வேண்டும்

## படிக்காத பட்டதாரி

பல்கலைக்கழகம் செல்லாத
பட்டதாரி நான்
சுயநல வாதி என
பட்டம் சூட்டப்பட்டேன்... !

நம்பிக்கை துரோகியாய்
நான் நாளாந்தம்
கணிக்கப் பட்டேன்
ஏமாற்றுக்காரனாய்
எண்ணப்பட்டேன்... !

எங்கள் தேசத் தெருக்கள்
திருவிழாக் காணாத போது
எங்கள் வீட்டுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் .. தினம்
திருவிழாக்கள்...!

வண்ண வண்ண தேர்களில்
வந்து வந்து போகும்
எம் எண்ணங்களையும்
எரிமலையாக்கும்
கண்ணங்களை நீர்த்துளி நனைக்கும்...!

எங்கள் அறைகள்
ஆவேசத்தால்
அலங்கரிக்கப் படும்
கருத்து வேறுபாடுகளின்
கருத்தரங்குகளும்
நிமிடத்திற்கு நிமிடம்
நடைபெறும் ..!

இத்தனைக்கும் மத்தியில்
நான் நரக
வேதனையின்
விரிவுரையாளன்...!

பல தடவை
பரிகாச பட்டமளிப்பு விழாவில்
நச்சரிப்புக்களின்
நகைகளால்
அணிவிக்கப்பட்டு
அதிர்ச்சி அடிகளால்
வரவேற்கப்பட்டு
இருக்கிறேன்...!

எல்லாவற்றுக்கும் மேலாக
வெளி உலகத்தில்
நான் ஒரு
பகல் வேஷப் பட்டதாரி...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே இப்படித்தான்.

கஷ்டத்தின் கடிகாரத்தில்
கவலைகளின் கம்பிகள்
கட கடத்து கொள்கின்றன.
காலம் காதல்
கடித அளவில் அழகாய்
அச்சடிக்கின்றது...!

அத்தனையும் அர்த்தமற்றவை
என்பதை நாட்கள் நகர்ந்த-பின்
உணர முடிகிறது...!

'பூவை நீ போலிப்
புல்லாங் குழல் எடுத்து
பொழுது போக்காய் ஊதி
மோகன மோர்கத்துக்குள்
முந்தானை விரித்து
மயக்க மருந்தினை-என்
கண்களிலே தடவிய போது
தரணியை நான் மறந்தேன்...!

உன்னை நினைத்தே தத்தளித்தேன்
எல்லாமே
காதல் மயக்கத்தில்
கண்ட கனவுகள்
கட்டிய மனக்கோட்டைகள்...!
காதல் கசந்த-பின்
வருந்தும் உள்ளத்தில்
முதிரும் உதிரப் பூக்கள்...!

---

# ஒற்றுமைக்கு ஒரு குரல்.

செம்மணி சுடலையில் இருந்து
ஒரு செய்தி
கனத்தை கல்லறையில் இருந்து
ஒரு கதறல்
மாதம்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைய வாடியில் இருந்து
ஒரு அவசர அழைப்பு...!

அத்தனைக்கும் அனைவரும்
செவி கொடுக்க
தயாராகுங்கள்
இல்லையேல்
இன்று இரவே
உங்கள் உயிர்களும்
சூறையாடப்படும் !

உயிரோடு இருக்கும்
எங்களுக்கு
இறந்து போன உடல்களில்
இத" அழைப்புக்கள்-இது
இல்லை இது
இதய வலிப்புக்கள் !

பேதங்கள் பொர்த்தெறிய
பெரும் வெடிகளின் சத்தம்
கல்லறைகளில் இருந்து
காற்றோடு கலந்து
எங்கள்
நெஞ்சறையை தாக்குகின்றது !

ஒற்றுமையாய்
ஒருமித்த பாயே
ஓர் தாய் பிள்ளைகள்
என வாழ்வோம்...!

கரவெட்டி கந்தசாமியும்
கந்தளாய் கலுபண்டாவும்
கல்முனை காதிரும்
ஒன்றாய் கை கோர்த்து
ஒரு கோப்பையில்
சாப்பிடும் சாதாரண
காட்சியினை
கடவுள் எங்கள்
கண்களுக்கு
காட்ட வேண்டும்
இதற்காக நாங்கள்
உறுதியுடன் உழைக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை கிளை ஒடித்து
ஒன்று பட நாங்கள் மறுத்தால்
மரணத்தின் பின்
எங்கள் கல்லறைகள்
எங்களைப் பார்த்து
சிரிக்கும்...!

## கனவுகளின் கவிதைகள்.

இரவின்றி பகல் இன்றி - என்
இதயத்தின் துடிப்பை
இயற்கைகள் உணர்ந்து கொள்ள
அவற்றின்
அவசர அழைப்பில் - என்
அயர்ந்த தூக்கம்...!

கலைக்கப்படுகின்றது
கவலைக் கண்ணாடியின்
முகத்தில் வழியும்
குருதி வியர்வையை
கைகளால் துடைத்துவிட்டு
கவி எழுத மேசையில்
அமர்கின்றேன்...!

கானகத்தில் கன்னியரின் கதறல்
கற்பனையில் சில
ஊமைகளின் உளறல்
என்னிடத்தில்
எல்லாமே சிதறல்
இப்படியே என்
தேகத்தில் தொடறல்

நானோ சோகத்தில் புரளல்
கவி எழுத கைகள் மறுத்தல்
மறுபடியும் நித்திரையில் விழுதல்...!

கனவுகளின் பலவர்ண நிறங்கள்
மறுபடியும் மந்திகள் தாவும் மரங்கள்
இவ்வாறே
கனவுகளின் ஊர்வலங்கள்
மறுபடியும் மனம் இன்றி...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி எழுத எழும்புகின்றேன்
கற்பனையில் ஏதேதோ புலம்புகின்றேன்
தேசம் தேய்ந்து போகையில்
மறுபடியும் தேசத்தின் நினைப்பில்
நிர்மூலமாகின்றேன்...!

## நவீன நற்செய்தி.

வயதுக்கு வந்த
வஞ்சியரின்
வாழ்க்கைப் புத்தகங்களின்
வாழ்க்கைப் பட்டவர்களின்
பக்கங்களை பலதட்டவை
புரட்டு கையில்
புலனாகும்...!

புதுப் புது அர்த்தங்கள்
அவர்களுக்கு அவையே
மனவருத்தங்கள்

வாழ்க்கைப் பட்டவள்
வாழ்விழந்தால்
வாழா வெட்டியாக்கி
அவளுக்கு ஒரு
வட்டத்தை வரைந்து வைக்கும்-
இவ்வையகம்

வெள்ளைப் பட்டுடுத்தி
விதவையென முகத்தில்
முத்திரை குத்தி
விழாக்- கோலங்கள் காணாது
கண்களைக் கட்டி
முழு நிலவின்
முகத்தை முழுமையாய்
மறைக்கும் மதி கெட்ட
மடையர்கள் ..!

மனைவியரை
மறுதலித்த கணவர்கள்
மணவறையில்
மாப்பிள்ளைகளாகலாம்
கணவர்களையிழந்த
மனைவியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப் பெண்களாய் மாறுவது
மரணத்துக்கேதுவான குற்றம்
என்று எழுதியிருக்கும்
எம் சமூக ஏடுகளை
சமாதிக்குள் சமைப்போம்...!

ஆணுக்கும் பெண்ணுக்கும்
சரிநிகர் என்று
எழுதி சரித்திரங்கள்
என்றே
எடுத்தெறியப்பட்டதென்று
எம்மவர் மத்தியில்

மலிவான பேச்சு
நாகரீக உலகில்
எல்லாமே மாறிப் போச்சு
வித்தியாசங்கள் விலகி
வெட்கங்கள் தணிந்து
சமரச சந்திப்புக்கள்
சரியான நிதானிப்புக்கள்

ஆணுக்கும் பெண்ணுக்கும்
இங்கே
ஏற்றத் தாழ்வுகள்
எதுவும் இல்லை
இது இக்கால வழக்கில்
வந்த புதிய வழிமுறைகள்
நிகழ் கால நிலைமைகளில்
ஆண்களே அந்தோ
பரிதாபம்.........!

பெண்ணடிமை
விரட்ட விரைந்த
வீரர்களே
பெண்களுக்குள்
அடிமையானார்கள்

நவீன உலகின்
நற் செய்திகளில்
இதுவும் ஒன்றுதானே......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகம் தணியும்!

பொழுது விடியுமுன்
பூக்கள் மலர முன்
ஊதாங் குழல்
எடுத்து அடுப்பூதிடும்
அம்மா மாரே...
அயராத சத்தங்கள்
என் கிராமத்தில்
கேட்கும் ........!

நெற் கதிர்களை
நித்திரை விழித்து
கதிரவன்
கண் விழிக்கும் வரை
கை தட்டி
மிருகங்களை விரட்டிடும்
காவல் வீரர்களின்
கூச்சல் ஒலிகள்
எம் கிராமத்தை
குழப்பும் .....!

இவர்கள்
விவசாயத்தின்
விளக்குகள்
என்
கிராமத்தின்
நிழல்கள்.. ......!

உறக்கத்தை
உதாசீனம் செய்து
வயல்களில் வீசும்
புயல்களை எதிர்த்து
புரட்சி செய்திடும்
ஜெகத்தின்
செயல் வீரர்கள்
என் கிராமத்தின்
நம்பிக்கை நட்சத்திரங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சிப் பானைகளை
தலையில் சுமக்கும்
தாரகைகள்
கலப்பைகளை
கையில் பிடிக்கும்
என் கிராமத்து
கதாநாயகன்கள்
சகாய வேலைகளை
சலிக்காது செய்யும்
சரித்திர
சந்ததிகள்......!

இந்தக் கிராமத்தை
இப்போது
நான் மறந்து
நாட்கள் பல
கடந்து போயிற்று
என்
கிராமத்தில் இருந்து
எனக்கு
வந்த மடல் ஒன்றில்
காய்ந்து போன குளத்தின்
கதை ஒன்றும்
வரண்டு போன
வயலின் வரலாறும்
எழுதப் பட்டிருப்பதை
எண்ணிப் பார்க்கையில்
என் இதயம்
ஈரலித்துப் போகின்றது...!

பளஞ் சோற்று
நீர் பருகி
பாலூட்டி வளர்த்த
என்
தாயின்
தாலாட்டு மடலின்
மடியில் தலை
சாய்த்து நித்திரை
கொண்ட
நாட்களின் கனவுகள்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
கண்களுக்குள்
உலாப் போகையில்
இனியும்
என்னால்
இங்கே
இருக்க முடியாது
உனைத் தேடி
ஒரு நாள்
உன் மைந்தன்
உன்னிடத்தில்
வருவான்
உன்
தாகமதை தீர்ப்பான்...!

## என் நிம்மதி !

கல்லறைகள் என் காதலர்கள்
சுடுகாடுகள் என் சொந்தக்காரர்கள்
பாலைவனங்கள் என்
பஞ்சனை மெத்தைகள்.........

இருள் மேகங்கள் எனது
இதயம் கவர்ந்த நண்பர்கள்
வனக் காடுகளே நான் வசிக்கும்
மல்லிகை மாளிகைகள்.......

நான் அமைதியாகத் தூங்கும்போது
மனிதர்களே நீங்கள் என்னை
குழப்ப வேண்டாம்
நீங்கள் என்னை குழப்பினால்.........

அவள் அதை பொறுக்கமாட்டாள்
நாளை நிரந்தர நிம்மதியை
அடையும் போது
சுடுகாடுகளே என்னை
சூழ்ந்து கொள்ளும்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவக்குழிகளோ சந்திக்க வரும்
சடலங்களோ என்னை தாலாட்டும்
எனது உறக்கம் பலருக்கு
ஏற்படுத்தும் கலக்கத்தை

என்னை மறந்து விடுங்கள்
நான் மரண தேவதைக்கு
மாலை சூட்டி விட்டேன்.........

என் முதலிரவின் முத்தங்களுக்கு
முத்திரை பறிக்கப்பட
இறுதி யாத்திரையின்
கடைசி ஊர்வலத்தில்
கண்ணீர் துளிகள் படுகின்றன.

*1989ல் எழுதப்பட்டது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலம் ஏற்குமா?

முகிலுக்குள் இருந்த ஒரு முகவரியை உங்கள் முகத்துக்கு முன் வைக்கிறேன் ஆறுதலாய் அடையாளம் காணுங்கள் காதலை கலங்கப்படுத்தி காவியம் படைக்கும் இக்கால கட்டத்தில் காதலை புனிதப்படுத்தும் ஓர் நிஜத்தின் நிலா என் கவிதை மேடையில் உலாவருகிறது. பலாசுளை சுவை போல் சுவைக்கும் இக் கவிதையை சுவைத்துப் பாருங்கள் இவ் ஏட்டினிலே இவ் இளைஞனின் எண்ணங்களை சிறு கவிதையாக சிருஸ்டித்துள்ளான். நாளை ஏழை இவனும் காலத்தை வென்ற கவிஞனாக மாற இம் மண் உலகம் இடம் கொடுக்குமா?

ஆசிரியர்

தெருத்துாசியோன்

## வசந்த காலத்திற்குள் வெள்ளை ரோஜா.

அந்த நந்த வன தோட்டத்திலே
வெள்ளை நிற ரோஜா ஒன்றே
பிரகாசித்து ஒளி வீசியது
அதில் இருந்து நறுமணம் பரவ
எனக்கோ இனம் புரியாத தாகம்
எவனும் அதை கவர்ந்து செல்ல முடியாத
கொடிய முற்கள் அதனை சூழ்ந்து
வேலியாக தடை விதித்து காத்து நிற்க
போலியாக சூழ்ந்து நின்ற ஏனைய மக்கள்
சோடி போட்டு கேலியாக சிரிக்க
சோகமே உருவாக காட்சியளித்த அதே-
என்னைக் கண்டு நாணத்தால் நேரத்தில்
வெட்கி தலை குனிய
அங்கே பிறந்தது காதல்
வேலியாக நின்ற கொடிய முட்களை
தகர்த்தெரிந்து தாலிகட்டியே
அணைத்துக் கொண்டேன்
புன் சிரிப்புடனும் புதுப் பொழிவுடனும்
வாடா மலராக நறுமணத்துடன்
வசந்த காலத்துக்குள்
இரு கரம் இணைந்து சென்றது
குதூகலத்துடன்.

ஜெஸ்லி மனுவேல்
இல. 50, நவ களனி புர,
வெள்ளம்பிடிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் பேசுகிறது.

என் இலக்கிய இதயங்களே
நான் காணும் உலகம் எனும்
எனது ஐந்தாவது நூலை வாசித்து
விமர்சனம் எழுதிய விரல்களுக்கு
எனது நன்றிகள் அப்படி எழுதப்பட்ட
ஒரு சிறந்த விமர்சனத்தை
இன் நூலில் சமர்பிக்கின்றேன்.

ஆசிரியர்
தெருத்தூசியோன்

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

நான் காணாத உலகத்தை நான் காணும் உலகமாக கண்டுகொண்டேன். இன்று என் இதயதிரையில் அவை காட்சியாக்கப்பட்டு என் சிந்தனைக்கு விருந்தானது வழிசருக்கி விழும் இளைஞர்களை தூக்கிவிட்டு வழிகாட்டும் வசனங்களால் வளம் படுத்தி நல் வாழ்வு வாழ்வதற்கு ஒரு வரைபடமாக இருக்கும் வழி முறைக்கு என் வந்தனங்கள்.

உள்ளம் அதை கொள்ளை கொண்ட வஞ்சகனை பாராட்ட என் கைகள் தகுதி அற்று தர்மசங்கடப்படகிறது. பாசத்தையும், வேசத்தையும் மனம் என்னும் ஒரே கண்ணால் பிரித்தறியும் புதுமைக் கவிக் கலைஞரே! நீங்கள் வாழ்க!

இதய அக நிம்மதி தேட வழி சமைத்து, இராஜினாமா செய்யும்; விந்தை மிகு தலைப்புகளால் நினைவுகள்; அல்ல நினைவாகப் போகும் நிஜங்களே, இதயக்கண்களால் நீங்கள் காணும் காட்சி எம் நிஜக்கண்களால் கூட கான முடியாமல் போனது என்பதை நினைத்து; தலைகுனிய வைத்த நான் காணும் உலகத்திற்கு நன்றிகள்; பல நன்றி.

பண்பின்

ஜெபராஜா மில்றோய் முரளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இலக்கியப் பயணத்தின் படிக்கட்டுக்கள்.

இந்நூல் மலர பொருளாதார உதவி புரிந்தோர்:-

திரு. இம்ரியாம்ஸ்
திரு. ஜெர்மன் நடராஜா

ஆசிரியர்; திருமதி. தங்கராசா
பிரபல தொழில் அதிபர்; திரு. வினோதன்
வி. எம். எஸ். ரி. ரவல் திரு. எ. விக்னேஸ்வரன்
ஈஸ்வரன் பிரதர்ஸ் உரிமையாளர்; ரி. ஈஸ்வரன்

என் வாயிலிருந்து உதிர்ந்த கவி மலர்களை பேனாவால் எழுதிய எஸ். எம். ரவி நூல் அச்சிலிருந்த போது எழுத்துப் பிழை பார்க்க என் பக்கத்தில் துணையாயிருந்தவர் செல்வி. எம். எம். ஜெயராணி.

என் இலக்கியக் கிளைகள் மேலும் பல கிளைகளை துளிர்க்கச் செய்யும் மேலும் பல உதவியாளர்களை எதிர்பார்க்கிறேன்.

தெருத்துாசியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுறும் குறல்கள் என்ற இக் கவிதைத் தொகுதி ஓர் அன்பனின் உதவியால் வெளிவருகிறது அந்த அன்பன்?

சமகால சமூகங்களின் சலனங்களை என் சரீரத்தில் சுமந்து நான் தேசத் தெருக்களில் நடக்கையில் வேதனை விழாக் கோலங்கள். கண்ணீரோடும் கப்பலையோடும் சாட்சியளிக்கும் கானகத்து மயிலினங்கள் தேசியம் தேய்ந்து போகையில் தேசத்திற்கு தீ வைக்கும் புதிய நீரோக்கள் இத்தனைக்கு மத்தியிலும் நானும் நடக்கிறேன் என் படைப்புக்களை பரிதாபப் பார்வை கொண்டு பார்க்காமல் சாதாரண முறையில் என் ஆக்கங்களை எடுத்துப் படியுங்கள்.

விடியாத வீடுகளுக்கு விளக்காய் நான் உங்கள் வீடு நோக்கி வருகிறேன் உங்கள் கருத்துக்களை எனக்கு எழுதியனுப்புங்கள்.

விலாசங்கள்

227/4 மாவித்தியாலய மாவத்தை
கொழும்பு 13
332/11 செட்டியார் தெரு
கொழும்பு 11

இது ஒரு

சென் ஜோன்ஸ் கல்வி வட்ட வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விழி போனாலும் வாழ்வின் வழி செல்லும்.

நண்பன் தெருத்தூரசியோன் தான் வாழ்ந்த சமூக சூழலையும் மக்களின தும் கலை கலாச்சார பன்பாட்டு அம் சங்களை இவ் ஆறாவது படைப்பான குமுறும் குரல்கள் கவிதைத் தொகுப் பால் அலங்கரிக்கிறார். கூடவே சமூக அவலங்களை இனங்கண்டு குமுறுகி றார் பாமரரும் புரியும் வண்ணம் எளி மையாக மண் வாசனையுடன் அதன் அழகு குலையாமல் தன் கடந்த கால நினைவுகளோடும் உணர்வுகளோடும் எம்மை சங்கமமாக்கிக் கொள்கின்றார் ஒவ்வொருவரும் படிப்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், இவர் மேலும் வளர, இவரது தரமான புதியபடைப்புக் கள் தொடர்ந்தும் வெளிவர உதவிக் கரம் நீட்டுங்கள்.

கெ. பாபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org